# யாழ் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர்களுக்கான விதிமுறைகள்

யாழ் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஒழுக்காற்றுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக அனைத்து மாணவர்களுக்கும் பின்வரும் விடயங்கள் அறிவுறுத்தப்படுகின்றது.

01. அனைத்து மாணவர்களும் தங்களது மாணவர் பதிவேட்டினை நிறுவனத்தின் நுழைவாயிலில் உள்ள பாதுகாப்பு ஊழியரிடம் காண்பித்த பின்னரே உள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவீர்கள்.
02. அனைத்து மாணவர்களும் தங்களது தேவையான விடயங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் தொடர்புகொள்ளும் போது மாணவர் பதிவேட்டினை தம்வசம் வைத்துக்கொள்வது கட்டாயமானதாகும் அத்தோடு உரிய மாணவரே சமூகமளித்தல் வேண்டும்.
03. மாணவர்கள் தங்களது தேவையான விடயங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் தொடர்புகொள்ளும் போது நிறுவனத்தினது நிர்வாக கட்டமைப்பு ஒழுங்கின் ஊடாக தொடர்பினை மேற்கொள்வது சிறந்ததாகும்.
04. பகுதிநேர மாணவர்கள் தங்களது பருவகால கட்டணங்களினை ஒவ்வொரு பருவகால கல்விச்செயற்பாடுகளும் ஆரம்பித்து இரு வாரங்களுக்குள் செலுத்துதல் வேண்டும்.
05. மாணவர்கள் வகுப்புகளுக்கு வரவு ஒழுங்கானது கட்டாயமானதாகும் மேலும் வரவு ஒழுங்கீனமாக காணப்பட்டால் பாடரீதியாக பரீட்சைக்கு தொற்றுவதற்கு தகுதியற்றவராக ஆக்கப்படுவீர்கள்.
06. தங்களது ஏதேனும் தேவைகளின் நிமிர்த்தம் மாணவர் பதிவேடானது நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பின் அச் சந்தர்ப்பத்தில் உதவிப் பதிவாளரினால் அல்லது நூலகரினால் தங்களுக்கு வழங்கப்பட்ட உறுதிப்படுத்தல் கடிதத்துடனே உள் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவீர்கள்.
07. நிறுவனத்திற்கு வரும் இ.போ.ச பேருந்தானது வெளியிலேயே நிறுத்தப்படும்.
08. நிறுவனத்தின் நிர்வாக கட்டடத்தொகுதியின் முன் பக்கத்தில் உள்ள இடத்தில் மாணவர்கள் அமர்ந்திருப்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
09. மாணவர்கள் வகுப்பறைகளில் உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
10. மாணவர்கள் மரியாதையான ஆடை அணிந்துவருதல் வேண்டும்.
11. நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட பொதுவான T-Shirt அனைவருக்கும் வழங்கப்படும் அதனையே அணிதல் வேண்டும்.
12. நிறுவனத்தின் அனைத்து வகுப்பறைகளிலும் உள்ள மாணவர்கள் தங்களுக்கான பாடவேளைகள் நடைபெறாத சந்தர்ப்பத்தில் ஏனைய வகுப்பறைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அங்கிருந்து வெளியேறி நூலகத்தினையோ அல்லது சிற்றுண்டிச்சாலையினையோ பயன்படுத்துதல் வேண்டும்.
13. வகுப்பறை கட்டடத்தொகுதியில் உள்ள வெளிப்புறப்பகுதிகளில் (Corridor) மாணவர்கள் அமர்ந்திருத்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது அத்துடன் வகுப்பறைகளில் உள்ள கதிரைகள் நிர்வாகத்தினரின் அனுமதிபெற்றே வெளிரேற்றுதல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளத்தவறின் மாணவர் பிரதிநிதியே இதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு பொறுப்பாவீர்கள

# 1998ம் ஆண்டின் 20ம் இலக்க, கல்வி நிறுவனங்களில் பகிடிவதையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்த சட்டம்

கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே பகிடிவதை புரிகின்ற அல்லது அதில் பங்கு பற்றுகின்ற எவரேனும் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாதல் வேண்டும்.

1. பகிடிவதை புரிகையில் எவரேனும் மாணவருக்கு அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவருக்கும் பாலியல் தொந்தரவை அல்லது பாரதூரமான காயத்தனை ஏற்படுத்தல்

   **இதற்குரிய தண்டனை:**

   - குற்றம் சாட்டப்பட்ட நபர் குறைந்தது 10 வருடங்கள் சிறைதண்டனையுடன் நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட அபராததொகையையும் பாதிக்கப்பட்ட நபருக்கு வழங்குதல் வேண்டும்.

2. கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் உடலுக்கு, நற்பெருக்கு அல்லது ஆதனத்துக்கு அல்லது பலியானவர் வேறு எந்தவொரு ஆளில் அக்கறையுடையவராக இருக்கின்றாரோ அந்த ஆளின் உடலுக்கு, நற்பெருக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறு விளைவிப்பதாக பலியானவரை அச்சத்துக்கு உட்படுத்தும் எண்ணத்துடன் அல்லது பலியானவர் எந்தச் செயலைச் செய்யுமாறு சட்டப்படி தேவைப்படவில்லையோ அந்தச் செயல் எதனையும் செய்யுமாறு அல்லது எந்தச் செயலைச் செய்யாது விடுமாறு வற்புறுத்தும் எண்ணத்துடன் வாய்மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அச்சுறுத்தல்.

   **இதற்குரிய தண்டனை:**

   - மேற்குறிப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட நபர் நீதவானால் குறைந்தது 5 வருடங்களுக்கு கடும் சிறைதண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்.

3. எந்தச் செயலின் மூலம் கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரின் அல்லது வேறு ஆளின் சொந்தத் சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் அத்தகைய கல்வி நிறுவனத்திற்குள்ளாக அல்லது அத்தகைய கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கீழும் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் வளவுகளுக்குள்ளதாக சட்ட முறையான நியாயப்படுத்தல் இல்லாமலும் அத்தகைய மாணவரை, பணியாட்டொகுதி உறுப்பினரை அல்லது வேறு ஆளை குறிப்பிட்டொரு செயல் நெறிமுறையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தும் நோக்கத்திற்காகவும் தடைசெய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனும் ஆள்.

   **இதற்குரிய தண்டனை:**

   - மேற்குறிப்பிட்ட செயல்கள் குற்றங்களாக அடையாளம் காணப்படுவதுடன் நீதவான் முன்னிலையில் குறைந்தது 7 வருடங்களுக்கு சிறைதண்டனை வழங்கப்படும்.

4. கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரை, அத்தகைய மாணவர் அல்லது உறுப்பினர் எந்த திசையை நோக்கிச் செல்வதற்கு உரிமை கொண்டுள்ளாரோ அந்த திசையில் செல்வதைத் தடை செய்கின்றவாறான அத்தகைய முறையில் சட்டவிரோதமாகத் தடுக்கின்ற எவரேனும் ஆள்.

   **இதற்குரிய தண்டனை:**

   - மேற்குறிப்பிட்ட செயல்கள் குற்றங்களாக அடையாளம் காணப்படுவதுடன் நீதவான் முன்னிலையில் குறைந்தது 7 வருடங்களுக்கு சிறைதண்டனை வழங்கப்படும்.

5. கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவரை குறித்த சில சுற்றுவட்ட எல்லைகளுக்கும் அப்பால் செல்வதை தடை செய்யக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய மாணவரை அல்லது பணியாட்டொகுதி உறுப்பினரை சட்டவிரோதமாக மறித்து வைக்கின்ற எவரேனும் ஆள்.

   **இதற்குரிய தண்டனை:**

   - மேற்குறிப்பிடப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் நபர் குறைந்தது 10 வருடங்களுக்கு கடும் சிறைதண்டனை அழிக்கப்படுவார் அவ்வாறில்லாத பட்சத்தில் தண்டப்பணமாக சுமார் 10000 ரூபாய் அறவிடப்படும். இல்லாவிடில் சிறைதண்டனையையும், அபராதபணத்தையும் இரண்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

6. கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் வளவுகளை சட்டபூர்வமாக காரணமின்றி, வலோத்காரமாக இருப்பாட்சி கொள்கின்ற எவையேனும் ஆள்.

   **இதற்குரிய தண்டனை:**

   - மேற்குறிப்பிடப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் நபர் குறைந்தது 20 வருடங்களுக்கு கடும் சிறைதண்டனையும் ரூபாய் 5000 அபராதமாகவும் அறவிடப்படுவார். அல்லது குறிப்பிட்ட குற்றச்செயலால் ஏற்பட்ட இழப்புக்களுக்காக நட்டஈடாக முழுச்செலவுகளையும் பொறுப்பேற்க வேண்டும்.

7. கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முாகமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேம் ஆதனம் தொடர்பில் சொத்தழிப்பு செய்கின்ற எவரேனும் ஆள்

எவ்வாறாயினும், புதிய மாணவர்களுக்கு அதிக பாதிப்பினையும் பொது மக்களின் ஆட்சேபனையினையும் உண்டு பண்ணும் பகிடிவதையினை தடுப்பதற்கு கடந்த தசாப்த காலத்தில் பல்கலைக்கழகங்களால் / உயர் கல்வி நிறுவனங்களினால் மேற்படி சட்டத்தினால் முறையாக பிரகடனப்படுத்தப்பட்டவை.

## பிரகடனம் செய்தல்

### மாணவரின் பிரகடனம்

1. ……………………………………………………… ஆகிய நான் யாழ் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர்களுக்கான விதிமுறைகள் மற்றும் பகிடிவதையும் வேறு வடிவிலான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டத்தில் உள்ள விடையங்கள் ஆகியவற்றை கவனமாக வாசித்து பூரணமாக விளங்கிக்கொண்டேன்.
2. நான் இத்தால் விளங்கிக்கொள்வது யாதெனில்
   - யாழ் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்ட விதிமுறைகளினை மதித்து நடப்பேன்.
   - பகிடிவதை எனும் வரைவிலக்கணத்தின் கீழ் வரும் எந்த நடத்தைக்கும் செயலுக்கும் இடம் கொடுக்க மாட்டேன்.
   - எந்த வகையான பகிடிவதையிலும் பங்கு பற்றவோ அல்லது தூண்டவோ அல்லது இன்னொரு தலைமுறைக்கு கொண்டு செல்லவோ மாட்டேன்.
   - எவரையேனும் உடல்ரீதியாகவோ மனரீதியாகவோ புண்படுத்தவோ அல்லது வேறுவகையான தீங்கு உண்டுபண்ணவோ மாட்டேன்.
3. ஏதேனும் ஒரு வடிவிலான பகிடிவதையினதும் குற்றவாளியாக காணப்பட்டால் அமுலாக்கப்பட்ட சட்டத்தின் படியும் நிறுவனத்தின் விதிகளின் படியும் நான் தண்டிக்கப்படலாம் என்பதற்கு சம்மதிக்கின்றேன்.

   ………… ஆம் ஆண்டு ………......மாதத்தில் ………… நாளன்று இது கையெழுத்திடப்பட்டது.

……………………..
மாணவர் கையொப்பம்

பெயர் - ……………………………………………
அனுமதி இலக்கம் - ……………………………………………
தே.அ.அ இல - ……………………………………………
விலாசம்- ………………………………………………………..
…………………………………………………………………

### பெற்றோர் / பாதுகாவலரால் உத்தரவாதமளித்தல்

1. ……………………………………………………… ஆகிய நான் யாழ் உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர்களுக்கான விதிமுறைகள் மற்றும் பகிடிவதையும் வேறு வடிவிலான வன்செயல்களையும் தடை செய்தல் சட்டத்தில் உள்ள விடையங்கள் ஆகியவற்றை கவனமாக வாசித்து பூரணமாக விளங்கிக்கொண்டேன்.
2. எனது மகன் / மகள் / காக்கப்படுபவர் எந்த வடிவிலான பகிடிவதைக்கும் இடம் கொடுக்க மாட்டார் என நான் உங்களுக்கு நிச்சயப்படுத்துகின்றேன்.
3. ஏதேனும் ஒரு வடிவிலான பகிடிவதையினதும் குற்றவாளியாக காணப்பட்டால் அமுலாக்கப்பட்ட சட்டத்தின் படியும் நிறுவனத்தின் விதிகளின் படியும் அவர் தண்டிக்கப்படலாம் என்பதற்கு சம்மதிக்கின்றேன்.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கையொப்பம் - ……………………

பெயர் - …………………………………..
மணவனுடனான உறவு முறை - ……………………………………
தே.அ.அ இல - ……………………………………
தொலைபேசி இல - ……………………………………
விலாசம் -……………………………………
……………………………………